செ.வெ.எண்: 66 நாள்:24.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**செல்வம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

நாமக்கல் மாவட்டம், முதலைப்பட்டி, செல்வம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பள்ளி வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.08.2021) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தமிழக அரசு உத்தரவின் படி வரும் செப்டம்பர் 1-ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாமக்கல் (வடக்கு) மற்றும் நாமக்கல் (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட பள்ளி வாகனங்களை, நாமக்கல் செல்வம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் கோட்டாட்சியர், நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், நாமக்கல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், நாமக்கல் வடக்கு மற்றும் நாமக்கல் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினரால் பள்ளி வாகனங்களுக்கான சிறப்பு விதி 2012-ன் படி உள்ளதா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் 123 பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டு 24 வாகனங்கள் அவசரகால வழி, நடைப்பாதை பலகை, படிகட்டு, பக்கவாட்டு விவரம், முதலுதவிப் பெட்டி மருந்துகள், தீயணைக்கும் கருவிகள் மற்றும் ஓட்டுநர் தடுப்பு போன்றவற்றில் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து சரிசெய்து மீண்டும் வட்டாரப் போக்குவரத்து அலுவலரிடம் ஆய்வுக்கு உட்படுத்த அறிவுறுத்தப்பட்டது. 99 வாகனங்களுக்கு பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் இந்த ஆய்வில் கலந்துக் கொண்ட பள்ளி வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகன பொறுப்பாளர்களக்கு தீயணைப்பு துறையினரால் வாகனத்தில் உள்ள தீயணைப்பு கருவியை அவசர காலத்தில் எவ்வாறு கையாள்வது என்று செய்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. கலந்து கொண்டவர்களுக்கு கபசுர குடிநீர், முகக் கவசம், கிருமிநாசினி வழங்கி கொரோனா தடுப்பு பற்றிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கொரோனா தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் பள்ளி வாகன ஓட்டுநர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திய பிறகு தான் வாகனத்தை இயக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறித்தினார்.

இந்த ஆய்வின் போது நாமக்கல் கோட்டாட்சியர் திரு.மு.கோட்டைக்குமார், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (வடக்கு) திரு.முருகேசன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (தெற்கு) திரு. முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள், முதன்மை கல்வி அலுவலர் திரு.அ.பாலுமுத்து மற்றும் தீயணைப்புத்துறை அலுவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.